ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 161/10 — 1975 අප්‍රේල් 30 වැනි බදාදා — 1975.04.30
161/10 ஆம் இலக்கம்—1975 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### வேண்டுதற் கட்டளை இலக்கம் 161

கூட்டுறவுச் சங்கங்களின் (விசேட ஏற்பாடுகள்) 1970 ஆம் ஆண்டு 35 வது இலக்க அதிகாரச் சட்டம்

10 ம் பிரிவிற்குட்பட்ட கட்டளை

1970 ஆம் ஆண்டு 35 வது இலக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் (விசேட ஏற்பாடுகள்) கட்டளைச் சட்டத்தின் 10(1) ம் பிரிவின்படி எனக்கு அளிக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தின்பேரில் வெளிநாட்டு, உள்நாட்டு வர்த்தக மந்திரியான திக்கிரி பண்டார இலங்கரத்ன ஆகிய நான் இக்கட்டளையில் உள்ள பட்டோலையில் குறிக்கப்பட்ட சொத்தை மட்டுப்படுத்தப்பட்ட கொழும்பு வடக்கு கூட்டுறவுச் சங்கத்தின் (பதிவெண்ணை 2459) வியாபார தேவைகளுக்காக வேண்டி 12 ம் தினம் மே மாதம் 1975 ஆண்டுதொட்டு இத்தால் வேண்டுதற் கட்டளை இடுகிறேன்.

கொழும்பு,
22.04.1975.

ரீ. பி. இலங்கரத்ன,
வெளிநாட்டு, உள்நாட்டு வர்த்தக மந்திரி.

பட்டோலை

கொழும்பு மாவட்டத்திலுள்ள கொழும்பு காரியாதிகாரியின் பிரிவிலே அலுத்கடே கிராம சேவையாளரின் பகுதியிலே கிராண்ட்பாஸ் வீதியில் அமைந்துள்ள மதிப்பீட்டிலக்கம் 336 இனைத் தாங்கியுள்ள கட்டடமும் காணியும். இதனைச் சூழ்ந்துள்ள எல்லைகளாவன :—

வடக்கில்—மதிப்பீட்டிலக்கம் 342, கிராண்ட்பாஸ் வீதி;
தெற்கில்—மதிப்பீட்டிலக்கம் 332, கிராண்ட்பாஸ் வீதி;
மேற்கில்—கிராண்ட்பாஸ் வீதி;
கிழக்கில்—மதிப்பீட்டிலக்கம் 342, கிராண்ட்பாஸ் வீதி.

5-219

---

கூட்டுறவுச் சங்கங்களின் (விசேட ஏற்பாடுகள்) 1970 ஆம் ஆண்டு 35 வது இலக்க அதிகாரச் சட்டம்

10 ம் பிரிவிற்குட்பட்ட கட்டளை

### வேண்டாமைக் கட்டளை இலக்கம் 8

1970 ஆம் ஆண்டு 35 வது இலக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் (விசேட ஏற்பாடுகள்) கட்டளைச் சட்டத்தின் 10(4) ம் பிரிவின்படி எனக்கு அளிக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தின்பேரில் வெளிநாட்டு, உள்நாட்டு வர்த்தக மந்திரியான திக்கிரி பண்டார இலங்கரத்ன ஆகிய நான், 1974 யூலை 22 ஆந் திகதிய 121/3 எனும் இலக்கத்தினையுடைய அதிவிசேடமான அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்த 119 ஆம் இலக்கக் கட்டளை மூலம் வேண்டுதல் செய்யப்பட்டதும், இக்கட்டளையில் உள்ள பட்டோலையில் குறிக்கப்பட்டுள்ளதுமான சொத்தினை 1975.04.24 எனும் திகதிதொட்டு இத்தால் வேண்டாமைக் கட்டளை இடுகிறேன்.

கொழும்பு,
24.04.1975.

ரீ. பி. இலங்கரத்ன,
வெளிநாட்டு, உள்நாட்டு வர்த்தக மந்திரி.

பட்டோலை

கொழும்பு மாவட்டத்திலுள்ள கொழும்புக் காரியாதிகாரியின் பிரிவிலே கொள்ளுப்பிட்டிய கிராம சேவையாளரின் பகுதியிலே அமைந்துள்ள கொழும்பு 3, டுப்பிளிக்கேஷன் வீதியில் மதிப்பீட்டிலக்கம் 33 இனைத் தாங்கியுள்ள கட்டடம். இதனைச் சூழ்ந்துள்ள எல்லைகளாவன :—

வடக்கில்—டுப்பிளிக்கேஷன் வீதி, மதிப்பீட்டிலக்கம் 35;
கிழக்கில்—24 வது ஒழுங்கை;
தெற்கில்—டுப்பிளிக்கேஷன் வீதி, மதிப்பீட்டிலக்கம் 31;
மேற்கில்—டுப்பிளிக்கேஷன் வீதி.

5-220

---

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.